## *ஞாபகார்த்தத்தில் யார் பங்குகொள்ளலாம் ?*

1. கர்த்தருடைய இராபோஜனம் உலகத்தாருக்கல்ல, பெயரளவிலுள்ள விசுவாசிகளுக்குமல்ல, ஆனால் கிறிஸ்துவை தங்களுடைய பாவங்களை சுமந்து தீர்த்தவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டு, அவருக்கும் அவருடைய ஊழியத்துக்கும் தங்களை பிரதிஷ்டை செய்திருக்கிறவர்களுக்கு மாத்திரமே உரியது. யார் பங்குகொள்ளலாம் யார் பங்குகொள்ளக்கூடாது என்று தீர்மானிக்க நமக்கோ அல்லது வேறு எந்த மனிதனுக்கோ அல்லது மனிதரின் குழுவுக்கோ ஆதிகாரம் கிடையாது. அப்பத்தை புசிப்பதற்கும் பாத்திரத்தில் பானம் பண்ணுவதற்கும் என்ன தகுதி இருக்கவேண்டுமென்பதை கர்த்தருடைய வார்த்தையால் சுட்டிக் காட்டுவதே நமது கடமையாயிருக்கிறது. நாம் அப்போஸ்தலர் சொன்ன பிரகாரம் எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, பிறகு தகுதியுள்ளவன் என்று கண்டால் அதிலே சேரக்கடவன் என்று சொல்லவேண்டும். (1கொ 11:28)

2. இருண்ட யூகங்களின் தவறான உபதேசங்களிலிருந்து இப்போது தேவனுடைய ஜனங்கள் வெளியேறுகிறதினால் ஞாபகார்த்த இராபோஜனத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளக் கூடியவர்களாகவும், தங்களை செம்மையாக சோதித்தறியக் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். ஆகையால் ஒவ்வொருவரும் கீழ்கண்டவாறு தன்னையே கேள்வி கேட்க வேண்டும்.

3.

(1) மனுக்குலத்தின் ஒரு அங்கத்தினன் என்ற முறையில் ஆதாம் பாவத்தின் காரணமாய் எல்லோருக்கும் வந்த மரண ஆக்கினைக்கு உட்பட்டவனாயிருந்தேன் என்று நான் விசுவாசிக்கிறேனா ?

(2) பாவம் மரணம் இவைகளின் ஆக்கினையிலிருந்து தப்பித்துக் கொள்ள எனது ஒரே நம்பிக்கை, மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவினுடைய மீட்கும் பலியினாலே ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் விசுவாசிக்கிறேனா ?

(3) நமக்கு பதிலாக அவர் தனது ஆத்துமாவை மரணத்திலூற்றி, தம்மை குற்றநிவாரணப் பலியாக ஒப்புக்கொடுத்து, தம்மையே (தன்னுடைய மாம்சத்தை, இரத்தத்தை, மனுஷீகத்தை) என்னுடைய மீட்கும் பொருள் கிரயமாகக் கொடுத்தார் என்று நான் விசுவாசிக்கிறேனா ? (ஏசா 53:10-12)

(4) அவர் யோர்தானில் ஞானஸ்நானம் பெற்றபோது ஆரம்பமாகி, கல்வாரியில் அவர் மரித்தபோது முடிந்த அவரது பிரதிஷ்டை மனுஷராகத் தம்மையே மரணபரியந்தம் பலியாகக் கொடுத்ததில் நிறைவேற்றப்பட்டது என்பதை நான் கண்டுகொள்ளுகிறேனா ?

(5) அவர் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்ததால், அந்த நியாயப்பிரமாணத்தின் நீதியினிமித்தம் பெற்றுக்கொண்ட உரிமைகளை விழுந்துபோய் செத்துக்கொண்டே இருக்கிற மனுக்குலத்திற்கு, தமது அதே பலியினால் மரண சாசனமாக ஏற்படுத்தி இருக்கிறார் என்பதையும், புது உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு கீழ்ப்பட்ட ஆசீர்வாதங்களை யார் யார் ஏற்றுக்கொள்கிறார்களோ அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதையும் நான் கண்டு கொண்டிருக்கிறேனா ?

(6) இவ்விதமாக பலியிடப்பட்ட அவருடைய மாம்சமும் இரத்தமும் கிரயத்துக்கு வாங்கிக்கொண்ட அந்த ஆசீர்வாதங்களுக்கும் தயைக்கும் அடையாளமாக இருக்கிறது என்பதை நான் கண்டு கொள்கிறேனா ?

(7) அவருடைய மாம்சத்துக்கும் இரத்தத்துக்கும் அடையாளமான அப்பதிலும் பாத்திரத்திலும் பங்கு கொள்ளுவது அவருடைய மாம்சமும் இரத்தமும் எனக்காகவும் எல்லோருக்காகவும் கிரயமாகக் கொண்ட அந்த தயையையும் ஆசீர்வாதங்களையும் நான் ஏற்றுக்கொண்டிருக்கிறேன் என்பதை குறிக்கின்றன என்று நான் கண்டு கொள்ளுகிறேனா?

(8) இவ்விதமாக ஞாபகப்படுத்தியிருக்கும் மீட்கும் பொருளை நான் முழு மனதுடன் ஏற்றுக்கொண்டிருந்தேனானால் என்னை முற்றிலுமாக (அந்த மீட்கும் பொருளின் மேலுள்ள விசுவாசத்தின் மூலமாக நீதிமானாகப்பட்ட என்னுடைய மாம்சமும் இரத்தமும்) அவரோடு பாடுபடவும் அவரோடு மரித்திருக்கவும், கர்த்தருக்கு தத்தம் செய்திருக்கிறேனா ?

9. இந்தக் கேள்விகளுக்கெல்லாம் நாம் "ஆம்" என்று பதிலை கொடுப்போமானால் , கர்த்தருடைய சரீரத்தை தெளிவாகவும், முற்றிலுமாகவும் கண்டுகொண்டிருக்கிறோம். அவருடைய புண்ணியமுள்ள பலிக்கு நன்மதிப்பு கொடுக்கிறோம், அவரை புசிக்கலாம், புசிக்க வேண்டும், "நீங்கள் எல்லோரும் வாங்கிப் புசியுங்கள்".

4. பாவத்திற்கும், பாவிகளுக்காகவும் மீட்கும் பொருள் தேவைப்பட்டது என்பதையும், அது கொடுக்கப்பட்டது என்பதையும் நிராகரிக்கிறவர்களும், கிறிஸ்துவின் புண்ணியத்தில் பங்கு கொள்ள அவசியமில்லை என்று

எண்ணுகிறவர்களும், ஒருவருடைய புண்ணியம் மற்றவருக்குச் சாட்டப்படலாம் என்பதை நிராகரிக்கிறவர்களும், கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தை எறிந்துவிட்டார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு, தங்களின் சொந்த நீதியின் அழுக்கான கந்தையில் சந்தோஷமாகவும், சுயேச்சையாகவும் இருக்கிறதாக உணர்கிறவர்களுக்கும், தங்களை முன்பு பரிசுத்தஞ்செய்த அந்த விலையேறப்பெற்ற இரத்தத்தை அசுத்தமென்றோ அல்லது சாதாரணமானதென்றோ எண்ணுகிறவர்களுக்கும் தங்களுக்கு நம்பிக்கையில்லாத அதை ஞாபகார்த்தமாகக் கொண்டாட வேண்டாம் என்று புத்தி கூறுகிறோம். ஏனென்றால், தங்களுடைய அவிசுவாசத்தோடே கபடத்தையும் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள், ஞாபகார்த்தத்தில் பங்குகொள்வார்களேயானால், அவர்கள் தங்கள் மீதும் தங்களுடைய மீட்கும் பொருளை மறுதலிக்கும் கோட்பாட்டின் மேலும் ஆக்கினையை வரவழைத்துக் கொள்ளுவார்கள்.